[1990 ஏப்ரல் 10

உரிமையாளர்களுடைய, அந்தச் சங்கத்தினுடைய நீண்டகால கோரிக்கையாகவும் அது இருப்பதால், அதனை அவசர, அத்தியாவசிய கோரிக்கையாக அரசு ஏற்று, இதனை ஒரு ஸ்பெஷல் கேசாக ட்ரீட் செய்து, மத்திய அரசை வலியுறுத்தி, விரைவில் இந்தப் புறவழிச்சாலை அமைய அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, அரசு விரைந்து இந்தச் சாலையை அமைக்க எல்லாவிதமான நடவடிக்கைகளையும் எடுக்கும்.

பாளயங்கோட்டையில் தொழிற்பேட்டை அமைத்தல்.

* 5040—திரு. சு. குருநாதன் :

மாண்புமிகு சமூக நலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பாளையங்கோட்டையில் தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

மகளிர் மேம்பாட்டுக் கழகம்.

* 6480—திருமதி பாப்பா உமாநாத் :

திருமதி ரமணி நல்லதம்பி :

மாண்புமிகு சமூக நலம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சென்னையில் செயல்பட்டுவரும் மகளிர் மேம்பாட்டு கழகத்தின் தொழில் துறைகளில் பணிபுரியும் பெண்களின் ஊதியத்தை உயர்த்திட அரசிடம் திட்டம் உள்ளதா ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திருமதி. பாப்பா உமாநாத் : தலைவர் அவர்களே, சென்னையில் உள்ள அச்சகம், சிவகாசியில் உள்ள அச்சகம் ஆகியவற்றில் பணிபுரிகிற தொழிலாளர்களுக்கு குறைந்த

1990 ஏப்ரல் 10]

பட்ச கூலிச் சட்டத்தின் கீழ் அறிவிக்கப்பட்டுள்ள ஊதியம் வழங்க வேண்டுமென்றும், இது தொடர்பான நிலுவைகளைத் தரவேண்டும் என்றும், இது சம்பந்தப்பட்ட அதிகாரி; துணை ஆணையர் தீர்ப்பு வழங்கியுள்ளதை அரசு அறியுமா? அந்த குறைந்தபட்ச கூலிக்குச் சமமான ஊதியத்தை அங்கே பணிபுரியக் கூடிய மகளிருக்கும் அரசு வழங்குமா என்று அறிய விரும்புகிறேன்.

9-50 மணி

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழக்கு மன்றத்திலே அப்படிப் பட்ட தீர்ப்பு வழங்கப் பட்டதை அரசு அறியும். ஆனால் அந்தத் தீர்ப்பு விசாரணைக்கு வருவதற்கு முன்பு அதிகாரிகள் வழக்கு மன்றத்திற்கு ஒரு வேண்டுகோள் விடுத்திருந்தார்கள் இந்த வழக்கு விசாரணையை மறு தேதிக்கு ஒத்திவைக்குமாறு கேட்டுக் கொண்டிருந்தும்கூட, அரசு அதிகாரிகள் கலந்து கொள்ளாமல் அந்த விசாரணை நடைபெற்று எக்ஸ்-பார்ட்டி யாக தீர்ப்பு கிடைத்திருப்பதை கருத்தில் கொண்டு, மீண்டும் அரசு அந்த வழக்கை நடத்த முடிவு எடுத்திருக்கிறது. தமிழ் நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் நடத்தப்படுகிற இந்த அச்சக மற்றும் தச்சுப் பொருட்கள் உற்பத்தி செய்கின்ற இந்த நிலையங்கள் தொழிற்கூடங்களாக அமைக்கப்படாமல் வெறும் பயிற்சி நிலையங்களாகத்தான் தொடங்கப்பட்டன. பொருளாதாரத் துறையில் பின்தங்கியிருக்கிற மகளிருக்கு அச்சுப் பணி மற்றும் தச்சுப் பணிகளில் பயிற்சி அளித்து அவர்களுக்கு வேலைவாய்ப்பை வேறு பகுதிகளிலே உருவாக்கிக் கொடுக்கின்ற நோக்கத்தோடு மத்திய மாநில அரசுகளின் நிதி உதவியோடு தொடங்கப்பட்ட இந்தத் திட்டம் முதலில் பயிற்சி முடிந்ததற்குப் பிறகு, அவர்களை வேறு துறையிலே பயிற்சிக்கு அமர்த்தாமல் அந்தப் பயிற்சி மையத்திலே தொடர்ந்து வேலை கொடுத்துக் கொண்டு இருப்பதன் காரணமாக அவர்கள் எதிர்பார்க்கிற அந்த குறைந்தபட்ச ஊதியத்தை அந்தத் துறையால் கொடுக்க இயலவில்லை. இருந்தாலும் கூட, கடந்த ஆட்சி யிலே அவர்கள் செய்த அந்தத் தவறின் காரணமாக தொடர்ந்து அவர்களுக்கு முதலிலே தந்துவந்த 200 ரூபாய் மானியம், பயிற்சிக் காலத்திலே தரப்பட்ட மானியம், மீண்டும் 259 ஆக உயர்த்தப்பட்டது. அதற்குப் பிறகு 285 ஆக உயர்த்தப்பட்டு, இப்போது 325 ரூபாய் கொடுக்கப்பட்டு இருக்கிறது. இதன் காரணமாக ஒவ்வொரு ஆண்டும் மகளிர் மேம்பாட்டுக் கழகத்திற்கு 6 லட்சம் ரூபாய் வரையில் நஷ்டம் ஏற்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து இந்தப் பிரச்சினையைப் பற்றிப் பேசிய நேரத்தில், அங்கே பணியாற்றுகிற பெண்களுக்கு அரசு அச்சகங்களில் வேலைவாய்ப்பு உருவாக்கித் தரப்படும். அதற் கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்

ததைத் தொடர்ந்து, அது பரிசீலிக்கப்பட்டுக் கொண்டு இருக்கிறது. எனவே தற்போது ஊதியத்தை உயர்த்துகிற திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மேம்பாட்டுக் கழகத்தில் பணியாற்றுகிற பெண்களிலே ஏறத்தாழ 100-க்கு அதிகமானவர்கள் ஊனமுற்றவர்களாகவும், தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாகவும் இருக்கிறார்களே, அதைக் கருத்தில் கொண்டாவது அவர்களுக்கு நல்ல வேலைவாய்ப்புக்கான அந்த ஓர்க்கிங் கண்டிசன்களை எல்லாம் நன்றாக மாற்றிக் கொடுத்து ஊதியத்தை நியாயமான முறையில் நிர்ணயம் செய்து அவர்களுக்கும் சமநீதி வழங்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு நடைபெற்றுக் கொண்டு இருக்கிற ஒரு தொழிற்கூடம் அல்ல. இது ஒரு பயிற்சி நிறுவனம். பயிற்சி முடிந்ததற்குப் பிறகு, அந்தப் பெண்களை வெவ்வேறு துறைகளிலே பணியில் அமர்த்துவதற்கான ஏற்பாட்டைக் கடந்த காலத்தில் செய்து இருக்கவேண்டும். அவர்கள் செய்யத் தவறியதினுடைய விளைவு, பயிற்சி பெற்ற இடத்திலேயே தொடர்ந்து அந்தப் பெண்கள் 60 பேர்கள் பணியாற்றிக் கொண்டு இருக்கிறார்கள். எனவே அவர்களுக்கு இருக்கிற நிலையை உணர்ந்துதான் அவர்களை அரசுத் துறையில் வேறு அச்சகங்களில் பணியிலே அமர்த்திக் கொள்வதற்கான பரிசீலனையை இந்த அரசு இன்றைக்கு மேற்கொண்டு இருக்கிறது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

வத்தலக்குண்டு அரசு மருத்துவமனைக்கு இருதய நோய் சிகிச்சைப் பிரிவு

* 4005—திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வத்தலக்குண்டு அரசு மருத்துவமனைக்கு இருதய நோய் சிகிச்சைப் பிரிவு வேண்டுமென்ற கோரிக்கை அரசுக்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?